**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.292** **நாள்: 15.07.2026**

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களின் தலைமையில் இன்று (15.07.2026) நடைபெற்றது .**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் இன்று (15.07.2026) ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்ற 44 கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் ஆம்பிபியன், ஆம்பிபியன் எஸ்கவேட்டர், மினி ஆம்பிபியன், ரொபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், சூப்பர் சக்கர் வாகனங்கள் என மொத்தம் 21 இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆகாயத்தாமரைகளை அகற்றி தூர்வாரும் பணிகளை துரிதப்படுத்தி முடிக்க வேண்டும். நீர்வழிக்கால்வாய்கள், ஏரிகள் மற்றும் குளங்களில் 02.05.2026 முதல் 10.07.2026 வரை 16,270 மெட்ரிக் டன் வண்டல்கள் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டுள்ளது.

தற்போது கால்வாய்களில் நடைபெற்று வரும் தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், தரைத்தளம் கான்கிரீட் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நீர்நிலைகளில் மேற்கொள்ளப்படும் புனரமைக்கும் பணிகளை விரைவுபடுத்தி முடித்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 241 குளங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 83 குளங்களில் ரூ.214 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளில் 49 குளங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது. 34 குளங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை விரைந்து முடித்திட வேண்டும்.

மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1,09,975 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் 68,281 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் மாநகராட்சி செயலியின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சியின் சார்பில் 120 பம்புகள் மற்றும் நீர்தேக்கத்

தொட்டிகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு மாநகராட்சியின் தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மரக்கிளைகள் அகற்றும் 15 சக்திமான் வாகனங்கள், 231 மர அறுவை இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட 5 மர அறுவை இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள மரக்கிளைகளை அகற்றும் பணியினை விரைவுபடுத்தி முடித்திட வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 19 சுரங்கப்பாதைகளிலும் மழைநீர்த் தேக்கமின்றி போக்குவரத்து சீராகச் செல்வதற்கு 138 மோட்டார் பம்புகள் 33 ஜெனரேட்டர் இயந்திரங்களைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தயார்நிலையில் இருக்க வேண்டும். தாழ்வான பகுதிகளில் மழைநீரினை வெளியேற்றும் வகையில் 525 மோட்டார் பம்புகள் மற்றும் 188 மின் மோட்டார்கள் தயார்நிலையில் உள்ளதை சரிபார்த்து பராமரித்திட வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள 215 மழைக்கால நிவாரண முகாம்களையும், 106 உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களையும் உரிய அடிப்படை வசதிகளுடன் தயார்நிலையில் வைத்திட வேண்டும்.

மழைநீர் வடிகால்வாய் பணிகளையும், 115 விடுபட்ட இடங்களில் 1128 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் கால்வாய் இணைப்பு ஏற்படுத்தும் பணிகளையும் விரைந்து மேற்கொண்டு மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தேவையான அளவிற்கு மோட்டார்களை தயார் நிலையில் வைத்திட வேண்டும்.

மேலும் தற்போது நடைபெற்று வரும் சாலைப்பணிகளை விரைவில் முடித்திட வேண்டும். சாலை வெட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களில் உடனடியாக சாலைப் பணிகளை முடித்திட வேண்டும். சாலைப் பணிகளுக்காக பழைய சாலையை அகழ்ந்தெடுக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது உடனடியாக சாலை அமைத்து மக்களுக்கு சீரான போக்குவரத்தை ஏற்படுத்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவ மழையின் போது தேவையான அளவிற்கு மருந்துகள் இருப்பதை உறுதி செய்திட வேண்டும், மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் தயார் நிலையில் இருந்திட வேண்டும். தேவையான அளவிற்கு மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மக்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பாக பணிகளை மேற்கொள்ள வேண்டும். மழைக்காலத்திற்கான சிறப்பு ஏற்பாடாக பருவமழை தொடர்பாக 1913 என்ற உதவி எண்ணில் தேவையான அளவிற்கு இணைப்புகளை ஏற்படுத்தி பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மற்றும் குறைகளை உரிய அலுவலர்களுக்கு தெரிவித்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள

வேண்டும். வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அலுவலர்கள் சிறப்பாகப் பணியாற்றி விரைந்து முடித்திட வேண்டும் என்று பேசினார்.

இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (கல்வி), திரு.செ.சரவணன் (பணிகள்), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., திரு.எச். ஆர். கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ்.ராஜேஸ்வரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**